3/c. 556

[Cam]bridge Senior Certificate Examination.

1931.

THE THIRUKKURRAL

Chapters 69-78.

Edited

with Dr. G. M. Pope's

Verse Translation

By

J. M. Kanaganayagam,

Asst. Master, C. M. S. Eng. School

KOPAY

All Rights Reserved. Price Re. 1.

The Ceylon Patriot Press, Manipay, Ceylon.

1931.

PREFACE.

Tamil literature is a sealed book to the generality of students for want of annotations in simple language. When I began to study Tamil fifteen years ago, my desire to study it was almost damped by the difficulties I experienced in understanding Parimelalagar. Thanks to Dr. Pope's splendid edition of the Thirukurral. I was able to understand the Kurral, after which I was able to follow Parimelalagar.

The Cambridge University prescribes annually ten chapters of the Kurral for the Senior School Certificate Examination. This portion interestingly presented to students should prove an incentive to them to continue their Tamil studies. Acting on this belief, I am presenting in this booklet a word-for-word translation of the text closely following Parimelalagar, the standard commentary on the Kurral, guiding the student on gradually to understand the great commentator direct.

The student will do well to read one chapter at a time, try to arrive at the meaning of each couplet unaided, then refer to the Notes and compare how far his own meaning agrees with that of Parimelalagar, the Notes being only an English rendering of the Commentator's, analyse the chapter and compare with the Commentator's analysis which is given after the Notes. The appendix contains Dr. Pope's verse translation, a perusal of which along with the Introduction will give the student a general idea of the

portion of the Kurral he has to study for the Cambridge examination of 1931. When once a chapter is understood, the student should be able to quote the whole chapter from memory with two or three readings. There is a handy pocket edition of the Kurral by the South India Saiva Siddhanta Works Publishing Society Ltd, Tinnevelly, which should be possessed by every student, as well as Arumuga Navalar's edition of Parimelalagar's commentary. Dr. Pope's Kurral will be useful for students working for degrees of the London University.

This book written for the use of my children is published in the hope it would be of use to students generally. Older readers will see how indebted I am to Dr. Pope's Thirrukurral and to Vadivelu Chettiar's திருக்குறள் விருத்தியுரை from both of which I have freely drawn. My introduction is adapted from Dr. Pope's.

I have to express my hearty thanks to the Oxford University Press, London, the publishers of Dr. Pope's Kurral, for the kind permission granted by them to reprint the great Tamil scholar's verse translation.

I have also gratefully to thank my friends in the teaching profession who have urged me on to publish this, and to the *Ceylon Patriot* Press for their neat and expeditious work.

Kopai, 23rd Jany. 1931. J. M. KANAGANAYAGAM.

Introduction.

Thiru-Valluva-Nayanar, the weaver of Mylapore, was, as Dr. Pope has said, "undoubtedly one of the greatest geniuses of the world: his fame belongs to South India alone and to only one great race there. He is the venerated sage and lawgiver of the Tamil people."

M. Ariel speaks of the Kurral as "the masterpiece of Tamil Literature-one of the highest and purest expressions of human thought." "That which above all is wonderful in the Kurral is the fact that the Author addresses himself without regard to castes, peoples or beliefs, to the whole community of mankind: the fact that he formulates soverign morality and absolute reason: that he proclaims in their very essence, in their eternal abstractedness, virtue and truth: that he presents, as it were, in one group the highest laws of domestic and social life: that he is equally perfect in thought, in language and in poetry, in the austere metaphysical contemplation of the great mysteries of the Divine Nature, as in the easy and graceful analysis of the tenderest emotions of the heart."

Tradition assigns him a Brahman father and a Pulaiya mother. All that we certainly know of him is that he was a weaver, lived at Mylapore, a suburb of Madras, and had a patron Elela-singan, the Captain of a small vessel.

That the poet lived in, if not before, the first century of the Christian era, we infer from the following lines wherein kurral No. 55 is quoted :—

> "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுபவள்
> பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
> பொய்யில் புலவன் பொருளுரை கேளாய்."

"Listen thou to this, the true Bard's pregnant word :—
No god adoring, low she bends before her lord;
Then rising serves; the rain falls instant at her word."

which appear in the (மணிமேகலை) Manimekalai. The poems Silappathikaram and Manimekalai were written contemporaneously and the date of their composition has been definitely fixed as the early years of the second century. Hence the Kurral quoted in the Manimekalai should have been current before that period and the first century of the Christian era we may take as the period when our poet flourished.

References to our poet in Tamil Literature are made under the following ten names:—

1. திருவள்ளுவர் —திரு+வள்ளுவர் from வண்மை. திரு is prosperity, wealth, goddess of fortune, the quality of being desired by the wise—அர் is honorary suffix—வண்மை is liberality. The poet has liberally given to mankind the wisdom which lay concealed and diffused in many books, collected and arranged in his work, for their readier understanding and assimilation. Or as the poet was brought up amongst Pariah people, he was named so, Valluvan meaning Pariah.

2. தேவர்—one with divine characteristics, or one who outshines others. Our poet is the universal Bard for Mankind and as such deserves the name.

3. முதற்பாவலர்—The foremost poet, முதன்மை denoting first in rank and பாவலர், poet, one skilled in versifying, பா meaning poetry and வலர் or வல்லவர், an able man.

Tamil poetry is of four kinds namely வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா and வஞ்சிப்பா : our poet has written his couplets in verse of the first kind. The term Muthatpavalar may therefore also mean 'one skilled in writing verse on Venpa metre'.

4. மாதாநுபங்கி—one who has loved all fellow-beings like a mother (மாதா) loving her own children,

5. தெய்வப் புலவர்—The (புலவர்) learned man or poet, (தெய்வ) with divine characteristics.

6. செந்நாப்போதார்—செம்மை is straightness, fairness; நா—tongue: போது—flower. The term means accordingly one possessing the flower of a sweet tongue.

7. பெருநாவலர்—பெருமை+நா+வலர்—The great one with the gifted tongue.

8. நான்முகனார்—The god with four faces, Brahma. The poet is so named as he is considered an incarnation of the god Brahma.

9. பொய்யில்புலவர்—பொய்ம்மை—falsehood, uncertainty. இல்—negative. The poet who has taught the world moral teachings in no uncertain terms.

10. நாயனார்—நாயன்—one who leads and ஆர், honorary suffix. The term thus means one who leads his fellows in the good path laid down in his work.

The Kurral.

The term Kurral means anything short and is the name of the shortest species of stanza in the Tamil language. As our poet's work is entirely done in this metre called Kurral Venpa, the name குறள் is given par excellence to this the poet's great and only work. A Kurral is a Couplet containing a complete and striking idea expressed in the refined and intricate metre called Kurral-Venpa.

The Kurral is divided into three books treating of Virtue, Wealth, and Pleasure —அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால், and is hence known as முப்பால் Muppal.

The first book treating of Virtue contains 38 chapters as follows:—

Introductory	...	Chapters	1— 4
Domestic Virtue	...	,,	5—24

Ascetic Virtue	...	„	25—37
Destiny ...	....	Chapter	38

The second book, Chapters 39—108, treats of wealth or property as follows:—

Royalty ...	...	Chapters	39—63
The Essentials of a State		„	64—95
Appendix	...	„	96—108.

The third book, chapters 109—133 treats of Love.

The portion that we study here is Chapters 69—78, taken from the Second book, that on Wealth, from the section அங்கவியல், 'Essentials of a State'. The poet devotes 32 chapters for treating these Essentials which are six in number:—(1) அமைச்சு, Ministers (2) நாடு, the Land, (3) அரண், fortification or defences, (4) பொருள், collection of revenue, (5) படை, the Army, and (6) நட்பு, friendship. We shall be studying the first five of these six 'angams'.

Each chapter contains ten couplets: the whole Kurral thus consists of 1330 couplets.

This work is known in Literature under the following names:—

1. திருக்குறள்—திரு+குறள்—திரு—sacred or illustrious and குறள்—work done on short verse.

2. முப்பால—work consisting of three books, to wit, அறத்துப்பால், பொருட்பால், and காமத்துப்பால், books on Virtue, Wealth, and Love.

3. உத்தரவேதம்— (உத்தரம்—after, வேதம்—that which treats of the true). The work which constitutes the After-Veda, giving the essentials of the Vedas.

4. தெய்வநூல்—The work possessing divine attributes or the divinely inspired work

5. திருவள்ளுவர்—The work is known by the author's name too.

6. பொய்யாமொழி—The work composed of words (மொழி) which never err or which have no admixture of falsehood in them.

7. வாயுறைவாழ்த்து—வாயுறை—The medicine of words. வாழ்த்து=வாழச்செய்வது—that which helps to live. Hence a work which enjoins its moral teachings on its readers and enables them to attain Life.

8. தமிழ்மறை—The Tamil Veda. மறை—meaning hidden or mysterious matters hidden to the generality of mankind.

9. பொதுமறை—The Veda (மறை) common to all castes.

10. திருவள்ளுவப்பயன்—The work of Tiru Valluvar teeming with பயன். பயன் is benefit or fruit, the fruit of learning being the achievement of, or attaining to, the four cardinal things, Virtue, Wealth, Pleasure and Bliss.

The Thiruvalluvamalai.

The திருவள்ளுவமாலை Thiruvalluvamalai is a collection of stanzas of praise of various poets on the Kurral. The following stanza by Paranar says that Vishnu, when he appeared as Vamana or the dwarf, measured with two steps heaven and earth; similarly with the two lines of his diminutive Venpa-footed kurral verse has Thiruvalluvar measured the Universe:—

"மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியான்
ஞாலமுழுது நயந்தளந்தான் : வாலறிவன்
வள்ளுவருந் தங்குறள் வெண்பாவடியால் வையத்தார்
உள்ளுவவெல்லாம் அளந்தார் ஓர்ந்து."

The universality of the Kurral is well brought out by Kalladar in his lines:—

"ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனி
னன்றென்ப வாறுசமயத்தார்—நன்றென
எப்பாலவரு மியைபவே வள்ளுவனார்
முப்பான் மொழிந்த மொழி."

The brevity and choiceness of the moral epigrams is brought out by the great poet Idaikkadar இடைக்காடர் :—

"கடுகைத் துளைத்தேழ் கடலைப்புகட்டிக்
குறுகத் தறித்த குறள்."

in which the குறள் is likened to a mustard seed with a hole drilled thereon and the waters of the Seven Seas forced and condensed therein. The குறள் is thus the acme of brevity. The poetess Avvai's contribution to the Garland of Praise on Thiruvalluvar are the very lines of இடைக்காடர் with the word அணுவை substituted for கடுகை, அணு signifying atom.

That it is impossible for the world to show its gratitude to Sage Valluvar for his gift of the Kurral or to the clouds for their gift of rain is brought out by the poet Nakkeerar நக்கீரர் in his lines:—

தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளா
லானா வறமுதலா வந்நான்கு—மேனோருக்
கூழி னுரைத்தாற்கு மொண்ணீர் முகிலுக்கும்
வாழி யுலகென்னாற்று மற்று.

Chapter 69. தூது.

§ 1.

681. அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு. (க)

682. அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்
கின்றி யமையாத மூன்று. (உ)

§ 2.

683. நூலாரு ணூல்வல்ல னாகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு. (ங)

684. அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு. (ச)

685. தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாந் தூது. (ரு)

686. கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தாற்
றக்க தறிவதாந் தூது. (சு)

687. கடனறிந்து காலங்கருதி யிடனறிந்
தெண்ணி யுரைப்பான் றலை. (எ)

§ 3.

688. தூய்மை துணைமை துணிவுடைமை யிம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு. (அ)

689. விடுமாற்றம் வேந்தர்க்குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன். (கூ)

690. இறுதி பயப்பினு மெஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாந் தூது. (௰)

Chapter 70. மன்னரைச் சேர்ந்தொழுகல்.

§ 1.

691. அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
விகல் வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார். (௧)

692. மன்னர் விழைப விழையாமை மன்னரான்
மன்னிய வாக்கந் தரும். (௨)

693. போற்றி னரியவை போற்றல் கடுத்தபின்
றேற்றுதல் யார்க்கு மரிது. (௩)

§ 2.

694. செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையு மவித்தொழுக
லான்ற பெரியா ரகத்து. (௪)

695. எப்பொருளு மோரார் தொடரார்மற் றப்பொருளை
விட்டக்காற் கேட்க மறை. (௫)

696. குறிப்பறிந்து காலங்கருதி வெறுப்பில
வேண்டுபவ வேட்பச் சொலல். (௬)

697. வேட்பன சொல்லி வினையில வெஞ்ஞான்றுங்
கேட்பினுஞ் சொல்லா விடல். (௭)

§ 3.

698. இளைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற
வொளியோ டொழுகப் படும். (௮)

699. கொளப்பட்டே மென்றெண்ணிக் கொள்ளாத செய்-
யார், துளக்கற்ற காட்சி யவர். (௯)

700. பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யுங்
கெழுதகைமை கேடு தரும். (௰)

Chapter 71. குறிப்பறிதல்.

§ 1.

701. கூறாமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்று
மாறாநீர் வையக் கணி. (௧)

702. ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல் (௨)

703. குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல். (௩)

§ 2.

704. குறித்தது கூறாமைக் கொள்வாரோ டேனை
யுறுப்போ ரனையரால் வேறு. (௪)

705. குறிப்பிற் குறிப்புணரா வாயி னுறுப்பினு
ளென்ன பயத்தவோ கண். (௫)

§ 3.

706. அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டு முகம். (௬)

707. முகத்தின் முதுக்குறைந்த துண்டோ வுவப்பினுங்
காயினுந் தான்முந் துறும். (௭)

708. முகநோக்கி நிற்க வமையு மகநோக்கி
யுற்ற துணர்வார்ப் பெறின். (௮)

§ 4.

709. பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்குங் கண்
ணின், வகைமை யுணர்வார்ப் பெறின். (௯)

710. நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்காற்
கண்ணல்ல தில்லை பிற. (௰)

Chapter 72. அவையறிதல்.

§ 1.

711. அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
றொகையறிந்த தூய்மை யவர். (௧)

712. இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லி
னடைதெரிந்த நன்மை யவர். (௨)

§ 2.

713. அவையறியார் சொல்லன்மேற் கொள்பவர் சொல்
லின், வகையறியார் வல்லதூஉ மில் (௩)

§ 3.

714 ஒளியார்முன் னொள்ளிய ராதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணங் கொளல் (௪)

§ 4.

715. நன்றென் றவற்றுள்ளு நன்றே முதுவருண்
முந்து கிளவாச் செறிவு. (௫)

§ 5.

716. ஆற்றி னிலைதளர்ந்தற்றே வியன்புல
மேற்றுணர்வார் முன்ன ரிழுக்கு. (௬)

§ 6.

717. கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து. (௭)

718. உணர்வ துடையார்முற் சொல்லல் வளர்வதன்
பாத்தியு ணீர்சொரிந் தற்று. (௮)

§ 7

719. புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க நல்லவையு
ணன்கு செலச்சொல்லு வார். (௯)

720. அங்கணத்து ளுக்க வமிழ்தற்றாற் றங்கணத்த
ரல்லார்முற் கோட்டி கொளல். (௰)

Chapter 73. அவையஞ்சாமை.

§ 1

721. வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
றொகையறிந்த தூய்மை யவர். (௧)

722. கற்றாருட் கற்றா ரெனப்படுவர் கற்றார்முற்
கற்ற செலச்சொல்லு வார். (௨)

723. பகையகத்துச் சாவா ரெளிய ரரிய
ரவையகத் தஞ்சா தவர். (௩)

§ 2.

724. கற்றார்முற் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருண் மிக்க கொளல். (௪)

§ 3.

725. ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு. (௫)

§ 4.

726. வாளொடென் வன்கண்ண ரல்லார்க்கு நூலொடெ
னுண்ணவை யஞ்சு பவர்க்கு. (௬)

727. பகையகத்துப் பேடிகை யொள்வா ளவையகத்
தஞ்சு மவன்கற்ற நூல். (௭)

728. பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையு
ணன்கு செலச்சொல்லா தார். (௮)

729. கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்து
நல்லா ரவையஞ்சு வார். (௯)

730. உளரெனினு மில்லாரோ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார். (௰)

Chapter 74. நாடு.

§ 1.

731. தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு. (க)

732. பெரும்பொருளாற் பெட்டக்க தாகி யருங்கேட்டா
லாற்ற விளைவது நாடு. (உ)

733. பொறையொருங்கு மேல்வருங்காற் றாங்கி யிறைவற்
கிறையொருங்கு நேர்வது நாடு. (ங)

734. உறுபசியு மோவாப் பிணியுஞ் செறுபகையுஞ்
சேரா தியல்வது நாடு. (ச)

735. பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்குங்
கொல்குறும்பு மில்லது நாடு. (ரு)

736. கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டிற் றலை. (சா)

§ 2.

737. இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணு நாட்டிற் குறுப்பு. (எ)

§ 3.

738. பிணியின்மை செல்வம் விளைவின்ப மேம
மணியென்ப நாட்டிற்கிவ் வைந்து. (அ)

§ 4.

739. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு. (கூ)

740. ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு. (ய)

Chapter 75. அரண்.

§ 1.

741. ஆற்று பவர்க்கு மரண்பொருளஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள். (௧)

§ 2.

742. மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
காடு முடைய தரண். (௨)

743. உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கி
னமைவர ணென்றுரைக்கு நூல். (௩)

744. சிறுகாப்பிற் பேரிடத்த தாகி யுறுபகை
யூக்க மழிப்ப தரண். (௪)

745. கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி யகத்தார்
நிலைக்கெளிதா நீர தரண். (௫)

746. எல்லாப் பொருளு முடைத்தா யிடத்துதவு
நல்லா ளுடைய தரண். (௬)

747. முற்றியு முற்றா தெறிந்து மறைப்படுத்தும்
பற்றற் கரிய தரண். (௭)

748. முற்றாற்றி முற்றி யவரையும் பற்றாற்றிப்
பற்றியார் வெல்வ தரண். (௮)

§ 3.

749. முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்ட தரண். (௯)

750. எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
யில்லார்க ணில்ல தரண். (௰)

Chapter 76. பொருள் செயல் வகை.

§ 1.

751. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள். (க)

752. இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு. (உ)

753. பொருளென்னும் பொய்யா விளக்க மிருளறுக்கு
மெண்ணிய தேயத்துச் சென்று. (ங)

§ 2.

754. அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள். (ச)

755. அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல். (ரு)

756. உறுபொருளு முல்கு பொருளுந்தன் னொன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள். (சா)

§ 3.

757. அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு. (எ)

758. குன்றேறி யானைப்போர் கண்டற்றாற் றன்கைத்
தொன்றுண்டாகச் செய்வான் வினை. (அ)

759. செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கு
மெஃகதனிற் கூரிய தில். (கூ)

760. ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொரு
ளேனை யிரண்டு மொருங்கு. (ய)

Chapter 77. படைமாட்சி.

§ 1.

761. உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாந் தலை. (௧)

762. உலைவிடத் தூறஞ்சா வன்கண் டொலைவிடத்துத்
தொல்படைக் கல்லா லரிது. (௨)

763. ஒலித்தக்கா லென்னா முவரி யெலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும். (௩)

§ 2.

764. அழிவின் றறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை. (௪)

765. கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கு
மாற்ற லதுவே படை. (௫)

766. மறமான மாண்ட வழிச்செலவு தேற்ற
மெனநான்கே யேமம் படைக்கு. (௬)

767. தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்குந் தன்மை யறிந்து. (௭)

§ 3.

768. அடற்றகையு மாற்றலு மில்லெனினுந் தானை
படைத்தகையாற் பாடு பெறும். (௮)

769. சிறுமையுஞ் செல்லாத் துனியும் வறுமையு
மில்லாயின் வெல்லும் படை. (௯)

770. நிலைமக்கள் சால வுடைத்தெனினுந் தானை
தலைமக்க ளில்வழி யில். (௰)

Chapter 78. படைச்செருக்கு.

§ 1.

771. என்னைமுன் னில்லன்மின் றெவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின் றவர். (க)

§ 2.

772. கான முயலெய்த வம்பினில் யானை
பிழைத்தவே லேந்த லினிது. (உ)

§ 3

773. பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கா
லூராண்மை மற்றத னெஃகு. (ங)

774 கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும். (ச)

775. விழித்தகண் வேல்கொண் டெறிய வழித்திமைப்பி
னோட்டன்றோ வன்க ணவர்க்கு. (ரு)

776. விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் னாளை யெடுத்து. (சா)

§ 4

777. சுழலு மிசைவேண்டி வேண்டா வுயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து. (எ)

778. உறினுயி ரஞ்சா மறவ ரிறைவன்
செறினுஞ்சீர் குன்ற லிலர். (அ)

779. இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர். (கூ)

780. புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பிற் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து. (ய)

NOTES

Chapter 69 தூது The Envoy.

The character of the accomplished ambassador or resident at a foreign court, is admirably drawn by sage Thiruvalluvar in this chapter. Envoys are of two classes, one watching his monarch's interests at the foreign court and furthering the same to the best of his ability and the other delivering his master's message parrot-like.

Kurrals Nos. 681 and 2 depict the general characteristics of both kinds of envoys; Nos. 683-7, of the first kind and Nos. 688--690 of the second kind of envoys.

No. 681. அன்புடைமை ஆன்றகுடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூது உரைப்பான் பண்பு.

தூது உரைப்பான் பண்பு The qualities of an ambassador (are) அன்பு உடைமை—having a benevolent mind, ஆன்ற குடிப்பிறத்தல்—high birth, and வேந்து அவாம் பண்பு உடைமை—the possessing of courtesy so pleasing to kings. பண்பு= குணம், quality, good quality. intrinsic excellence. அன்பு—here means a benevolent mind-affection towards one's kindred and dependants.

ஆன்ற—fitting. As the ambassador represents his king at a foreign court, the ambassador should be chosen "of good stock". Cf. the saying குலத்தினளவேயாகுமாங் குணம்—one's excellence will be commensurate with his birth.

No. 682. அன்பு அறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்
பார்க்கு, இன்றி அமையாத மூன்று.

அன்பு, அறிவு, ஆராய்ந்த சொல்வன்மை,—love, knowledge and skill in choice speech, இன்றி யமையாத மூன்று, are the three indispensable requisites, தூது உரைப்பார்க்கு,—of ambassadors. அன்பு here is attachment to his sovereign. அறிவு is knowledge of his sovereign's affairs. சொல்வன்மை—power of speech—ஆராய்ந்த சொல்—carefully chosen words.

No. 683. நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் வேலாருள்
வென்றி வினை உரைப்பான் பண்பு.

வேலாருள்—amidst armour bearing kings, வென்றி வினை உரைப்பான் பண்பு—the quality of him who utters words of victory (for his king), நூலாருள் நூல்வல்லன் ஆகுதல்—is to be well versed in learning amongst the learned.

No. 684. அறிவு உருவு ஆராய்ந்தகல்வி இம் மூன்றன்
செறிவு உடையான் செல்க வினைக்கு.

அறிவு, உருவு, ஆராய்ந்த கல்வி, இம்மூன்றன் செறிவுஉடையான்—he who has these three qualities-sense, graceful figure and exquisite learning-well combined in him, செல்க வினைக்கு—may go as an envoy. வினை—work, here envoy's work.

No. 685. தொகச் சொல்லி தூவாத நீக்கி நகச் சொல்லி
நன்றி பயப்பது ஆம் தூது.

தூது ஆம்—an envoy is one, நன்றி பயப்பது—who secures advantage for his master, தொகச்சொல்லி—speaking concisely, தூவாத நீக்கி—avoiding harsh words, நகச் சொல்லி, and speaking pleasantly.

The connective particle உம் has been elided. Without the elision the first line would be தொகச் சொல்லியுந் தூவாத நீக்கியும் நகச் சொல்லியும்.

No. 686. கற்றுக் கண் அஞ்சான் செலச் சொல்லிக் காலத்தால்
தக்கது அறிவது ஆம் தூது.

தூது ஆம்—He is an envoy, கற்று—who is well learned, செலச் சொல்லி—who talks impressively, கண் அஞ்சான், who is of fearless eye, காலத்தால் தக்கது அறிவது—and who knows to do the proper thing as suits the occasion.

The envoy should be well versed in the Science of Politics, should talk impressively to the other monarch, and should that king turn frowning eye fearlessly face it, and be

tactful enough to meet every contingency and turn it to the benefit of his master.

No. 687. கடன் அறிந்து காலம் கருதி இடன் அறிந்து
எண்ணி உரைப்பான் தலை.

தலை, He is the best ambassador who, கடன் அறிந்து—understands what is due from him (to his betters, princes), காலம் கருதி—considers the most suitable time, இடன் அறிந்து—selects the proper place, எண்ணி—ponders over what he has to speak, உரைப்பான்—and delivers his errand.

தலை—Chief or first.

No. 688. தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்
வாய்மை வழி உரைப்பான் பண்பு.

வழி உரைப்பான் பண்பு—The characteristics of the envoy who faithfully delivers his master's message are, வாய்மை truthfulness, இம்மூன்றின்—conjointly with these three, to wit, தூய்மை—purity, துணைமை—ministerial support, துணிவு உடைமை and boldness.

தூய்மை—personal purity and integrity.

இம்மூன்றின் = இம்மூன்றினொடு, with these three.

வழி—manner.

From this couplet on we consider the qualities of the second type of envoy who parrot like reproduces his master's message. The envoy should possess the three characteristics (1) integrity, (2) the support of the ministers of the court the envoy is come to, (3) boldness or determination and in addition to these three characteristics, the added one of truthfulness.

Note the device for emphasis used by our poet. Instead of saying four characteristics are to be had in an envoy, he mentions three and brings on a fourth, with a இம்மூன்றின் between.

No. 689. விடுமாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் வடுமாற்றம்
வாய் சோரா வன்கண் அவன்.

விடுமாற்றம்.........உரைப்பான்—He who is fit to speak to (other) kings his sovereign's mandates, வன்கணவன்—should have the selfpossession, வாய்சோரா—not even inadvertently to utter, வடுமாற்றம்—discreditable or unworthy things.

மாற்றம்=word. வடு=blemish, fault. விடு=emit, leave. விடுமாற்றம் is வினைத்தொகை.

வன்கண்—a stern eye, cool determination. வல் or வன்= hard, cruel.

No. 690. இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு
உறுதி பயப்பது ஆம் தூது.

தூது ஆம்—He is an ambassador who, எஞ்சாது—unfailingly, இறைவற்கு உறுதிபயப்பது—seeks his sovereign's good, இறுதி பயப்பினும்—though it should cost him his own life (in delivering the message).

Chapter 70.

மன்னரைச் சேர்ந்தொழுகல்—**Conduct in the presence of the king.**

This chapter treats of conduct in a Court; how ministers should behave in the presence of the Sovereign.

No. 691. அகலாது அணுகாது தீ காய்வார் போல்க
இகல் வேந்தர் சேர்ந்து ஒழுகுவார்.

இகல்.........ஒழுகுவார்—The ministers who serve under kings whose temper is everchanging, அகலாது.........போல்க—should behave like those who warm themselves near the fire, neither going too far from it nor getting too near it.

இகல்=மாறுபாடு—Monarchs shower their favours on a favourite one minute and the next order his execution! Hence இகல் வேந்தர்=monarchs of a changing temparament. Dr. Pope translates இகல்—warlike. The minister should neither make himself too prominent nor relegate himself to obscurity.

No. 692. மன்னர் விழைப விழையாமை மன்னர் ஆன்
மன்னிய ஆக்கம் தரும்.

மன்னர்........விழையாமை—The (minister's) not longing for those things desired eagerly by monarchs, மன்னிய ஆக்கம் தரும்—brings in abounding prosperity, மன்னரால்—at the hands of the monarchs. விழை—desire eagerly. விழைப—things so desired, here referring to the pomp and State of the king including the crown, sceptre, the state umbrella, anklet, chariots etc.

No. 693. போற்றின் அரியவை போற்றல் கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கும் அரிது.

போற்றின்—Should a minister desire to protect himself, அரியவை போற்றல்—let him avoid committing serious errors; கடுத்த பின் தேற்றுதல்—the clearing of suspicions once aroused, யார்க்கும் அரிது—is a rare achievement.

போற்று—ward off, defend, extol. அரியவை—serious errors which cannot be tolerated at all by the monarch, such as treasonable dealings on the part of the minister with the enemy. கடுத்த பின்—after anger has arisen.

போற்றல்—Optative with ending அல்; அல்லீற்று வியங்கோள்

தேற்றுதல்—தொழிற்பெயர்.

No. 694. செவிச் சொல்லும் சேர்ந்த நகையும் அவித்து ஒழுகல்
ஆன்ற பெரியார் அகத்து.

ஆன்ற...அகத்து—While in the presence of the sovereign, செவிச்சொல்லும்...ஒழுகல்—avoid whispers and interchange of smiles.

ஒழுகல்=behave. அவித்து—having repressed—நகை= laughter, நகு=laugh. சேர்ந்த நகை—the laughing together. ஆன்ற=full, perfect. பெரியார்=the great.

No. 695. எப்பொருளும் ஓரார் தொடரார் மற்று அ பொருளை
விட்டாக்கால் கேட்க மறை.

மறை—when the monarch holds secret converse, எப்பொருளும்—whatever the subject may be, ஓரார்—(ministers) shall not pry into it, தொடரார்—nor interrogate their master on it, அப்பொருளை விட்டக்கால் கேட்க—but shall listen to him if he divulges it himself.

மற்று is a particle (இடைச்சொல்) and signifies change of action (வினைமாற்று). எப்பொருளும் for எப்பொருளையும், object of the verbs ஓரார் and தொடரார்.

No. 996. குறிப்பு அறிந்து காலம் கருதி வெறுப்பு இல
வேண்டுப வேட்ப சொலல்.

குறிப்பு அறிந்து—Understanding the signs (i. e., understanding the disposition of the king from his facial expression etc), காலம் கருதி—and seeking the fitting time, வேட்ப சொலல்—the minister should suggest in a winsome manner, வெறுப்பு இல—things not displeasing, வேண்டுப—and such as are necessary.

வேண்டுப—things that are desired or wanted, from வேள்= require, ask, want.

No. 697. வேட்பன சொல்லி வினை இல எஞ்ஞான்றும்
கேட்பினும் சொல்லா விடல்.

வேட்பன சொல்லி—speak desirable things, எஞ்ஞான்றும் சொல்லாவிடல்—but never speak, வினையில—fruitless words, கேட்பினும்—even if the king asks for same.

Dr. Pope translates கேட்பினும் 'though heard', the king then passively listens to the idle talk of his ministers. This is not quite correct. Parimelalagar's interpretation is the

correct one, namely, that the minister should declare to the king desirable things even if the king has not asked for them and should abstain from frivolous fruitless talk even if the king asks for same--The latter is not the province of the minister but of the Court jester or fool.

No. 698. இளையர் இனமுறையர் என்று இகழார் நின்ற
ஒளியோடு ஒழுகப்படும்.

இளையர்.........இகழார்—ministers should not despise their monarch as their junior in years or as being their kinsman, ஒழுகப்படும்—but shall behave, நின்ற ஒளியோடு—with becoming reverence to the Divine light in him.

நின்ற—abiding, from நில். நின்ற ஒளி—the halo or glory surrounding the person of the monarch, which abides in him and never leaves him even when asleep.

No. 699. கொளப்பட்டேம் என்று எண்ணி கொள்ளாத செய்யார்
துளக்கு அற்ற காட்சியவர்.

துளக்கற்ற காட்சியவர்—Those (ministers) with unwavering vision, கொள்ளாத செய்யார்—will not do graceless acts, கொளப் பட்டேம் என்று எண்ணி—thinking that they have obtained the king's favour. கொள்ளாத—disagreeable or unacceptable, from கொள்=approve, accept, esteem. கொளப்பட்டேம் or கொளப்-பட்டோம்=we have been esteemed. துளக்கு=அசைவு=motion.

No. 700. பழையம் என கருதி பண்பு அல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும்.

கெழுதகைமை—the intimacy, பண்பல்ல செய்யும்—which makes one do unseemly things, பழையம் என கருதி—on the strength of his old familiarity, கேடு தரும்—will ensure his ruin.

கெழுதகைமை—கெழு+தகைமை. கெழு or கெழுவு=intimacy. தகைமை or தகை=fitness, excellence, beauty, appropriate quality. Hence கெழுதகைமை=intimacy.

Chapter 71.

குறிப்பறிதல். The knowledge of indications.

(i. e. Knowing the sovereign's mind by reading his countenance).

No. 701. கூறாமை நோக்கி குறிப்பு அறிவான் எஞ்ஞான்றும்
மாறா நீர் வையக்கு அணி.

கூறாமை.........அறிவான்—He who knows his sovereign's mind by looking at him and without being told of it, எஞ்ஞான்றும்—is always, அணி—a gem, வையக்கு—to the world, மாறா நீர்—surrounded by the never-drying sea.

He who looks and reads his sovereign's unspoken thought is always a gem amongst the wise men of the world, which is surrounded by the undrying sea.

குறிப்பு—indication, intention, மாறா—unvarying, unchanging, as used of a sheet of water—undrying.

No. 702. ஐயப்படாது அகத்தது உணர்வானை
தெய்வத்தொடு ஒப்ப கொளல்.

தெய்வத்தொடு.........கொளல்—Consider him as a deity, ஐயப்படாது...உணர்வானை—who can unhesitatingly scan what transpires in another's mind.

No. 703. குறிப்பின் குறிப்பு உணர்வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்.

கொளல்—obtain the services of those, குறிப்பு உணர்வாரை—who read the thoughts of others, குறிப்பின்—by their own thoughts, யாது கொடுத்தும்—even sacrificing an angam (அங்கம் = உறுப்பு) of the State to do so.

The above is as per Parimelalagar—Other Commentators take குறிப்பின் குறிப்பு உணர்வாரை to mean "who read the minds of others by their facial expression" குறிப்பின் = by the countenance and குறிப்பு = others' intention or mind.

உறுப்பு—is அங்கம், "essential members" of the State, which are four in number:–ரத கஜ துரக பதாதிகள் =தேர் கரி பரி காலாட்கள், =chariots, elephants, horses and footsoldiers.

No. 704. குறித்தது கூறாமை கொள்வாரொடு ஏனை
உறுப்பு ஓரனையர் ஆல் வேறு

குறித்தது கூறாமை கொள்வாரொடு with those who understand others' thoughts though unuttered in words, ஏனை—others (i. e those who cannot decipher another's thoughts, வேறு (are different people) have nothing in common except, உறுப்பால் ஓரனையர்—their resemblance in body.

உறுப்பு ஓரனையர் ஆல் you turn into உறுப்பால் ஓரனையர்—ஓரனையர்—ஒருதன்மையராக ஒப்பாவர்—their resemblance or oneness is only physical, in respect of their bodies. வேறு—mentally those ministers who can understand unspoken thoughts are superior to those who cannot do so.

No. 705. குறிப்பின் குறிப்பு உணராவாயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண்.

உறுப்பினுள்.........கண்—Of what use are the eyes amongst the several members of the body, உணராவாயின்—if they cannot discern, குறிப்பு—others' thoughts, குறிப்பின்—from their own indications?

No. 706. அடுத்தது காட்டும் பளிங்கே போல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.

முகமே—The face indeed, நெஞ்சம் கடுத்தது காட்டும்—will show what is uppermost in the mind, அடுத்தது காட்டும் பளிங்குபோல்—like the crystal mirrors what is near by.

கடுத்தது—மிக்கது i. e. மிகுந்துள்ள குணம்—uppermost thoughts Verbal noun (தொழிற்பெயர்) derived from the adverb கடி (உரிச்சொல்). The final ஏ at the end of பளிங்கே has been taken off it and added on to முகம்.

Translate: As the crystal mirrors what is near by so does the face portray what is uppermost in the mind.

No. 707. முகத்தின் முதுக்கு உறைந்தது உண்டோ உவப்பினும் காயினும் தான் முந்துறும்.

முகத்தின்........உண்டோ—Is there anything so full of knowledge as the face? உவப்பினும்—even if rejoicing, காயினும்—or burning with anger, தான் முந்துறும்—it is first. முதுக்குறைந்தது—(முதுக்கு—அறிவு, உறைந்தது—மிக்கது, prescient skill-abounding knowledge.

Translate: Hath aught more abounding knowledge than the face? Whether pleased or vexed it is first or precedes (the mind or speeeh through which the mind expresses itself).

No. 708. முகம் நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி உற்றது உணர்வார் பெறின்.

அகம் நோக்கி உற்றது...பெறின்—Should one obtain men who by looking into the mind understand what has transpired, முகம்...அமையும்—it is enough for him to stand looking at their faces. (There will be no necessity for any speech at all). உற்றது—what has happened. அமையும்—போதும்—it is enough.

No. 709. பகைமையும் கேண்மையும் கண் உரைக்கும் கண்ணின் வகைமை உணர்வார் பெறின்.

கண்ணின் வகைமை......பெறின்—Should a king get ministers who can read the varying aspects of looks, கண் உரைக்கும்—their (i. e. the ministers') eyes will declare, பகைமையும் கேண்மையும்—the hatred and friendship (unuttered and lurking in the hearts) of other kings.

கண்ணின்வகைமை = நோக்கின் வேறுபாடு—changes in looks, the look of hatred and the look of friendship. கண், the eye or organ of sight, is used to signify நோக்கு—sight and is hence பொருளாகுபெயர்—Metonomy.

Were a king lucky enough to possess ministers who read different looks, such ministers' eyes will declare to the

sovereign other monarchs' hatred or friendship, though this hatred or friendship has not been given utterance to by them but lurk in their (other monarchs') minds.

No. 710. *நுண்ணியம் என்பார் அளக்கும் கோல் காணுங்கால்*
கண் அல்லது இல்லை பிற.

அளக்கும் கோல்—The measuring rod, *நுண்ணியம் என்பார்*—of those (ministers) who say "we are sagacious," *காணுங்கால்*—will on scrutiny be found to be, *கண் அல்லது பிற இல்லை*—their eyes and not anything else.

நுண்ணியம்—we are sagacious, *நுண்* or *நுட்*—fine, subtle.

Chapter 72. அவையறிதல். Knowing the Court.

A minister must know the tone and temper of the Council before whom he must discuss affairs of state.

No. 711. *அவை அறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்*
தொகை அறிந்த தூய்மை அவர்.

சொல்லின் தொகை அறிந்த தூய்மையவர்—Let the pure in mind who know the sum total of words, *சொல்லுக*—speak, *ஆராய்ந்து*—with deliberation, *அவை அறிந்து*—knowing the nature of the council then assembled.

The minister should know if the councillors assembled in the *அவை* are abler than himself (*மிக்கார்*) or his equals (*ஒப்பார்*) or inferior to himself (*தாழ்ந்தார்*). He has to speak with deliberation *ஆராய்தல்* as to (a) the subject that should be talked to the particular council (b) the manner in which the subject should be presented (c) the likely result of introducing the subject etc.

தூய்மை--purity, *தூய்மையவர்*—the pure, *தொகை*—sum total.

No. 712. இடை தெரிந்து நன்கு உணர்ந்து சொல்லுக சொல்லின்
நடை தெரிந்த நன்மையவர்.

சொல்லின் நடை...நன்மையவர்—Let those excellent men who are versed in eloquence, சொல்லுக—speak, நன்கு உணர்ந்து—with a clear knowledge, இடை தெரிந்து—discerning the fitting place and time. நடை—is gait, method, from நட= walk, hence style or flow (of words). இடை=செவ்வி= கேட்பதில் ஆசையுடைமை. A speaker should judge if his audience appreciates his speech and desires to hear him. So when preparing his discourse he should discern the fitting place and time to introduce the particular things he has to say.

நன்குணர்ந்து is வழுப்படாமல் மிகவும் தெளிந்து—The speaker should have a distinct knowledge of what he has to say, and which should be free from errors; வழு is two fold, சொல் வழு and பொருள்வழு, error in word and error in meaning. So நன்குணர்ந்து should be translated "with distinct knowledge, free from errors." Dr. Pope translates "What well they have made their own."

No. 713. அவை அறியார் சொல்லல் மேற்கொள்பவர் சொல்லின்
வகை அறியார் வல்லதூஉம் இல்.

அவைஅறியார்—Those who do not know the nature or measure of the council, சொல்லல் மேற்கொள்பவர்—and undertake to speak, சொல்லின்வகைஅறியார்—do not know the use of words, வல்லதூஉம் இல்—and have no great learning.

அவை, as given in No. 711 is the measure thereof in the three respects மிகுதி, ஒப்பு, and தாழ்வு.

வல்லது is கற்று வல்ல கலை; all his prior learning is come to nought with his failure to speak properly in the royal council; his not knowing the proper use of words has made him the laughing stock of the whole court.

No. 714. ஒளியார் முன் ஒள்ளியர் ஆதல் வெளியார் முன்
வான் சுதை வண்ணம் கொளல்.
